‘டிரில்லியன்ட்’ நிறுவனம் - ரூ.2 ஆயிரம் கோடி புரிந்துணர்வு ஒப்பந்தம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

டிரில்லியன்ட் நெட்வர்க்ஸ் நிறுவனம் (Trilliant Networks, Inc)

டிரில்லியன்ட் நிறுவனம் மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு (Advanced Metering Infrastructure), ஸ்மார்ட் கிரிட், ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் IIoT (Industrial Internet of Things) ஆகியவற்றிற்கான தீர்வுகளை வழங்கும் முன்னணி சர்வதேச நிறுவனமாகும். இந்நிறுவனம் ஆற்றல் திறன், நம்பகத்தன்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களின் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு போன்றவற்றிற்கு தீர்வுகளை வழங்குகிறது. இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், வட கரோலினாவின் கேரியில் அமைந்துள்ளது.

டிரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், டிரில்லியன்ட் நிறுவனத்திற் கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ட்ரில்லியன்ட் நிறுவனத்தின் தலைமை வணிக அலுவலர் மைக்கேல் ஜே மார்டிமர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

நைக்கி நிறுவனம் (NIKE Inc.)

நைக்கி நிறுவனம் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய விளையாட்டு காலணிகள் மற்றும் ஆடைகள் தயாரிப்பு நிறுவனமாகும். நைகி நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

கால்பந்து, கூடைப்பந்து, தடகளம், டென்னிஸ், அமெரிக்க கால்பந்து, கோல்ஃப், ஜஸ் ஹாக்கி போன்ற விளையாட்டிற்கான காலணிகள், ஜெர்சிகள், ஷார்ட்ஸ், கிளீட்ஸ், பேஸ்லேயர்ஸ் போன்றவை இதன் தயாரிப்பு பொருட்களில் அடங்கும்.

இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், ஓரிகானின் பெவர்டனில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நைக்கி நிறுவனம் அதன் விநியோகச் சங்கிலி விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

மேலும், நைக்கி நிறுவனத்தின் இரண்டு பெரிய ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபெங் டே மற்றும் பவுச்சென் மூலம் தமிழ்நாட்டில் நைகி நிறுவனம் தனது காலணி உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு 60 இலட்சம் ஜோடி காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வரு கிறது. இதில் 28,000 நபர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

நைக்கி நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

முதலமைச்சர் அவர்கள், நைகி நிறுவனத்தின் தலைமை வழங்கல் அலுவலர் (Chief Supply Chain Officer) வெங்கடேஷ் அழகிரிசாமி, துணைத் தலைவர்கள் திருமதி கிறிஸ்டன் ஹேன்சன், ஜார்ஜ் காசிமிரோ மற்றும் உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டில் தோல் அல்லாத காலணிகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், ஆடைகள் உற்பத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது பற்றியும், சென்னையில் தயாரிப்பு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் முதன்மையான திறன் மேம்பாட்டு திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ், திறன் கூட்டாண்மையுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

ஆப்டம் நிறுவனம் (Optum)

ஆப்டம் நிறுவனம் யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் துணை நிறுவனமாகும். இது அமெரிக்காவில் உள்ள ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனங்களில் முன்னணி நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் Optum Rx, Optum Health, Optum Insight ஆகிய மூன்று வணிகங்களை மேற்கொண்டு வருகிறது. தரவு மற்றும் பகுப்பாய்வு, மருந்தக பராமரிப்பு சேவைகள், மக்கள் தொகை சுகாதாரம், சுகாதார விநியோகம் மற்றும் நடவடிக்கைகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்க நாட்டின் மினசோட்டா, ஈடன் பிரார்யில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனம் சென்னையில் 5,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் Revenue Cycle Management செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

ஆப்டம் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

முதலமைச்சர் அவர்கள் ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ரோஜர் கானர், யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் முதுநிலை துணைத் தலைவர் ஜான் மியாட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்களுடன் ரோஜர் கானர், தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாட்டின் செழித்து வரும் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற வகையில், தொழில் துறைக்குத் தயாரான திறமைக் குழுவை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசித்தார்.

மேலும், இச்சந்திப்பின்போது, திறன் மேம்பாடு மற்றும் திறன்சூழலை எவ்வாறு இணைந்து செயல்படுத்துவது என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் கலந்துரையாடியது மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்த ரோஜர் கானர்., உயர் செயல்திறன் கொண்ட நவீன சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, தொடர்ந்து உலகளாவிய திறமைகளில் முதலீடு செய்து வருவதாகவும், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய தங்கள் சேவை திறன்கள் மற்றும் செயல்திறனை மேம்படுத்தி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தொழில்முனைவோர் -

மின்னணு ஊடகம் மூலமாக சந்தைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி!

சென்னை, செப். 7 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம். சென்னையில் “தொழில் முனைவோர் டிஜிட்டல் மார்க்கெட்டிங்’ தொடர்பான வகுப்புப் நேரடிப் பயிற்சியானது 25.09.2024 முதல் 27.09.2024 வரை மூன்று நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை இந் நிறுவன கட்டிட வளாகத்தினுள் நடைபெற உள்ளது.

“தொழில்முனைவோர் டிஜிட்டல் மார்க்கெட்டிங்’ அறிமுகம் டிஜிட்டல் மார்க்கெட்டிங், தரவு கையாளுதல், சைபர் கொள்கை (விதிமுறைகள் & நிபந்தனைகள்) மார்க்கெட்டிங் உத்திகள், போட்டிசந்தைப்படுத்துதல், சமூக ஊடக தரவு, டிஜிட்டல் இருப்பு, தேவை மற்றும் வாடிக்கையாளர்களை இணைத்தல், டிஜிட்டல் ஆன்லைன் கருவிகள் மற்றும் ஆதரவு அமைப்பு ஆகியவை தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட பாடங்கள், டிஜிட்டல் மார்க்கெட்டிங் அறிமுகம்: அடிப்படை, போக்குகள் மற்றும் முக்கியத்துவம், டிஜிட்டல் நிலப்பரப்பைப் புரிந்துகொள்வது: சமூக ஊடகங்கள், எஸ்.சி.ஓ மற்றும் கட்டண விளம்பரம், இலக்கு பார்வையாளர்களை அடையாளம் காணுதல்: உத்திகள் மற்றும் பார்வையாளர்களைப் பிரித்தல், டிஜிட்டல் இருப்பை உருவாக்குதல், சந்தை தேவைகளை உருவாக்குதல், வருவாய் மற்றும் வருவாய் மாதிரிகளை உருவாக்குதல், டிஜிட்டல் வணிக தீர்வுகள், இணைப்பு மற்றும் நெட்வொர்க்குகள் போன்ற பாட தலைப்புகள்பயிற்சியில் இடம்பெறும்.

ஆர்வமுள்ளவர்கள் (ஆண் / பெண்/ திருநங்கைகள்) 18 வயதிற்கு மேற்பட்ட, குறைந்தப்பட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் பங்குப் பெறும் ஆண் / பெண்/ திருநங்கைகள் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக குறைந்த கட்டண வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், இப் பயிற்சிப் பற்றிய விவரங்களை அறிய / பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்துக் கொள்ளலாம். அலுவலக வேலை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம். முகவரி தொலைபேசி / கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032.

8668100181 / 9841336033/ 04422252081 / 82

இவ்வாறு அந்நிறுவன இயக்குநகர் தெரிவித்துள்ளார்.

காரைக்குடியில் திராவிடர் கழகத்தின் சார்பில்

குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா!

சிவகங்கை, செப். 7 –

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் திராவிட கழகத்தின் சார்பில் கண்ணதாசன் மணி மண்டபத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா திராவிட கழகத்தின் காப்பாளர் சாமி திராவிட மணி தலைமையில் நடைபெற்றது. ம.கு. வைகறை வரவேற்றுப் பேசினார்.

குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவினை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் குன்றக்குடி அடிகளார் கருத்து பெட்டகம் என்ற நூலைவெளியிட எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. மேயர் எஸ்.முத்துதுரை, துணை மேயர் என்.குணசேகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

திராவிட கழக தலைவர் கி. வீரமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறித்து சிறப்புரையாற்றினார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஏற்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, ஒன்றியச் செயலாளர்கள் சுப. சின்னதுரை, கே.எஸ்.ஆனந்த், நிர்வாகிகள் சேவியர், சன்.சுப்பையா, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துகுமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மாவட்டக் கழகச் செயலாளர் சி.செல்வமணி நன்றி கூறினார்.

விழா ஏற்பாடுகளை காரைக்குடி மாவட்டக் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள

தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, செப் 7 –

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (05.09.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப்படகுகளையும் விடுவித்திடவும், மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை தள்ளுபடி செய்யவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஆழமாக பாதிக்கும் கவலைக்குரிய விஷயத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களது வாழ்வாதாரத்தை மிகவும் பாதிப்பதாகக் குறிப்பிட்டுள்ளதுடன், தமிழ்நாட்டின் புதுக்கோட்டையைச் சேர்ந்த 4 மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் (பதிவு எண்.INDTN 08MM1418) இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மீனவக்குடும்பங்கள் வேதனை!

இந்தப் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு பல தலைமுறைகளாக வாழ்வாதாரமாக திகழ்வதாகவும், மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தமிழ்நாட்டு மீனவர் சமூகத்தினருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், 21.07.2024 அன்று IND TN12MM5900 என்ற பதிவெண் கொண்ட படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட 12 தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் 03.09.2024 அன்று 1.5 கோடி ரூபாய் அபராதம் விதித்ததாகவும், இது ஏற்கனவே துயரத்தில் உள்ள மீனவ குடும்பங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குவதுடன் அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பையும் ஏற்படுத்தும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அபராதத் தொகையினை தள்ளுபடி செய்க!

எனவே, இலங்கை வசம் உள்ள மீன்பிடிப் படகுகளை விடுவித்திடவும், மீனவர்களை தாயகத்திற்குத் திரும்பி அழைத்து வரவும், மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

விமான நிலையத்தில் கழகத்தினர் திரள்கின்றனர்!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, செப். 7-

மதுரையில் வரும் ஒன்பதாம் தேதி மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது. அதில் இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

அதற்காக நாளை (8-ஆம் தேதி) மாலை விமானம் மூலம் மதுரை வரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் நிகழ்வில் மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தினர்

அலைகடலென திரண்டு வருமாறு வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அதில் மேலும் ஒரு மைல் கல்லாக மாபெரும் நலத்திட்ட உதவிகளை வரும் 9.9.2024 - திங்கள்கிழமை அன்று மதுரையில் இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்க உள்ளார். பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் இவ்விழாவிற்காக விமானம் மூலம் நாளை (8.9.2024 ஆம் தேதி) மாலை 7 மணிக்கு மதுரை விமான நிலையம் வந்தடைய உள்ளார்.

அப்போது மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தினர் இரு வண்ண கொடியை கையில் ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க அலைகடலென திரண்டு வருமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புழல் ஒன்றியச் செயலாளர் பெ.சரவணன் முன்னிலையில்

புழல் ஒன்றியத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது!

மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில்!

சென்னை, செப். 7 –

சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி, அழிஞ்சிவாக்கம் ஊராட்சி சென்றம்பாக்கம் ஊராட்சி தி.மு.க பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (5.9.2024 – வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு விளாங்காடுபாக்கம் சமுதாய கூடம், காலை 11 மணிக்கு சென்றம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம், மதியம் 12 மணிக்கு அழிஞ்சிவாக்கம் சமுதாய கூடம் அருகில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்றது.

விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன் முன்னிலை வகித்தார்.

சென்றம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் என்.ராமு, அழிஞ்சிவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆஷாகல்விநாதன், பொதுக்குழு உறுப்பினர் ஜெய்மதன், ஒன்றிய அவைத்தலைவர் வி.செல்வமணி, புழல் ஒன்றிய பெரும் தலைவர் தங்கமணி, ஒன்றிய துணை பெரும் தலைவர் பி.சாந்தி பாஸ்கரன், துணைச் செயலாளர்கள் ராஜேஸ்வரி, எந்திராஜ், முருகன், அண்ணாதுரை, ஒன்றிய பொருளாளர் வெங்கடேசன், மாவட்டப் பிரதிநிதிகள் நா.ஜெகதீசன், அற்புதராஜ், மு.ரமேஷ்.

மாவட்ட அணியின் அமைப்பாளர்கள். சி.ஏழுமலை, பி.நந்தகுமார், மா.மணி, மல்லிராஜா, வி.பாரதி, ஜி.காமராஜ், ஜெகன்தங்கராஜன், வடகரை விஜி. ஜெ.முருகன், டில்லி பாபு, இளைஞர்அணி துணை அமைப்பாளர் இனியன், கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.